FWC

**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2015
## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | இந்து சமயம் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

➢ **பகுதி I இல் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

### பகுதி - I

01) இந்து சமய வளர்ச்சியில் வேதங்களின் முக்கியத்துவத்தினை மேல்வருவன தொடர்பாகச் சுருக்கமாக விளக்குக.
(அ) சமய மரபு
(ஆ) தத்துவ மரபு
(இ) சமுதாயம் (7 + 7 + 6 = 20 புள்ளிகள்)

02) இந்து சமய நெறிகளில் ஒன்றாகிய காணபத்தியத்தின் சிறப்பம்சங்களை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.
(அ) காணபத்திய நெறியின் தோற்றமும் வளர்ச்சியும்
(ஆ) விநாயகர் திருவுருவும் தத்துவக் கருத்துக்களும்
(இ) கணபதிக்குரிய வழிபாட்டு முறைகள் (7 + 7 + 6 = 20 புள்ளிகள்)

03) தமிழகத்தில் சைவ பக்தி இயக்கம் வளம் பெற்றவாற்றை மேல்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்க.
(அ) சைவ பக்தி இயக்கம் வளம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்திய அக்காலச் சமயப் பண்பாட்டு நிலைகள்
(ஆ) நாயன்மாரின் பங்கும் பணியும்
(இ) திருத்தலங்கள் (7 + 7 + 6 = 20 புள்ளிகள்)

The National e-learning Portal for the General Education

### பகுதி - II

❖ **மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

04) இந்து தரிசனங்களில் சாங்கிய தரிசனம் பெறும் முக்கியத்துவத்தினை பின்வரும் தலைப்புகளில் விளக்குக.
(அ) சாங்கியம் என்பதன் பொருள் பிரமாண நூல்கள்
(ஆ) சாங்கியம் கூறும் புருடதத்துவம்
(இ) பிரகிருதித் தத்துவம் (4 + 8 + 8 = 20 புள்ளிகள்)

05) சைவசித்தாந்த ஆன்ம கோட்பாட்டின் பிரதான அம்சங்களை மேல்வரும் தலைப்புகளின் அடிப்படையில் ஆராய்க.
(அ) ஆன்மா பற்றிச் சைவசித்தாந்தம் தரும் விளக்கம்
(ஆ) ஆன்மாவும் மும்மலங்களும்
(இ) ஆன்மாவும் இறைவனும்
(ஈ) முத்திப்பேறு (5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள்)

06) இந்து சமுதாய வரலாற்றில் ‘புருடார்த்தங்கள்’ பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.

07) திருக்கோணேஸ்வர ஆலயத்தின் சிறப்புப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

08) மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றிச் சுருக்கமான குறிப்புக்கள் எழுதுக.

| | |
|---|---|
| (அ) அக்கினி | (ஆ) திருவருட்பயன் |
| (இ) கடையிற் சுவாமிகள் | (ஈ) திருமூலர் |
| (உ) ஆணவம் | (ஊ) தட்சணாமூர்த்தம் |

(5 x 4 = 20 புள்ளிகள்)